**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 40/2022**

பெயர் : செல்வக்குமார் (PW2)

த/க/பெ. :

தேதி : 20.08.2024 (செவ்வாய்)

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

தாவா சொத்து இருப்பது மேலையூர் கிராமம். நான் இருப்பது சிதம்பரம் தாலுக்கா வீரண் கோவில் திட்டு. வாதி என் உறவினர். பெரிய மாமியார் ஆவார். நான் இருக்கும் இடத்திற்கும் மேலையூர் கிராமத்திற்கும் சுமார் 50 கீ.மீ தொலைவு இருக்கும். சொத்து பிரதிவாதிக்கு எப்படி கிடைத்தது என்று தெரியாது. வாதி சொத்தை வாங்கும் போது நானும், மேலையூரை சேர்ந்த மற்றொரு நபரும் இருந்தோம். அந்த நபர் பெயர் தெரியவில்லை. தாவா சொத்தின் சர்வே நம்பர் எனக்குநினைவில் இல்லை. சொத்து குழிக்கணக்கில் பேசப்பட்டது. குழி ரூபாய். 4000-5000 என பேசப்பட்டது. கிரய பத்திரம் வா.சா.ஆ. 1 பதிவு செய்யும் போது நானும் இருந்தேன். கிரய பத்திரம் எழுதி மறுநாள் பதிவு செய்யப்பட்டது. கிரய பத்திரம் எழுதும் போது நான் சாட்சி கையெழுத்துப் போட்டேன். கிரய பத்திரத்தில் சாட்சியாக மற்றொரு நபர் போட்டார். அவர் தற்போது இறந்துவிட்டார். கிரயம் வாங்கும் போது காலியிடமாக வாங்கப்பட்டது. இடம் வாங்கப்பட்டதன் நோக்கம் வீடு கட்டுவதற்காக வாங்கப்பட்டது. தாவா சொத்திற்கு வட புறம், தென்புறம் பிரதிவாதி இடம் என்றால் சரிதான். கிழக்கு பக்கம் யார் என்பது தெரியவில்லை. மேற்கே யார் சொத்து என்பதும் தெரியவில்லை. பிரதிவாதி இடத்திற்கு தெற்கே ரோடு உள்ளது. அது கிழக்கு மேற்கு சாலை பூம்புகார் செல்லும் ரோடு ஆகும். நேரடியாக சொத்திற்கு செல்வதற்கு பாதை உள்ளதாக சொன்னார். நான் பார்த்ததில்லை. சொத்திற்கு பாதையே இல்லை என்றாலும், கடன் வாங்குவதற்காக ஏற்பட்ட பொருப்புறுதி ஆவணம் வ.சா.ஆ. 1 என்றால் சரிதான். கிரய ஆவணம் பெற்ற தேதியில் இருந்து 1 வருடத்திற்குள் பட்டா மாற்றி விட்டார்களா என்றால் மாற்றி விட்டார்கள். என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வீடு கட்டுவதற்கு அவர் இடம் வேண்டும் என்று கேட்டுள்ளார். 3 ஆண்டு காலமாகதான் பிரதிவாதி இடத்தை தர மாட்டேன் என்று சொல்கிறார். அதற்கு முன்பு இல்லை. இடத்தில் என்னென்ன

மரங்கள் உள்ளது என்ற விபரம் தெரியாது. காலிமனையாக இருந்த போது நான் பார்த்தேன். போலிசில் புகார் கொடுக்க நான் உடன் செல்லவில்லை. வாதி எத்தனை முறை காவல் நிலையம் சென்றுள்ளார்கள், அவ்வாறு சென்றுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து குறித்து பிரதிவாதி மனைவி காந்திமதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து குறித்து என்னென்ன நான்கெல்லை விபரம் எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது. வாதிக்கு பிரதிவாதி சொத்தை கிரயம் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்பது பொய் என்றாலும், பிரதிவாதி பெற்ற கடனுக்காக பொருப்புறுதியாக எழுதிக் கொடுத்த ஆவணம் தான் வா.சா,ஆ., 1 ஆவணம் என்றால் சரியல்ல. பாதை இல்லை என்பதை தெரிந்துதன் கிரண ஆவணம் ஏற்பட்டுள்ளதுஎன்றால் சரியல்ல. கிரய ஆவணம் உண்மையாக இருக்கும் பட்சத்தில் பாதை இல்லாத சொத்தை வாதி வாங்க வாய்பில்லை என்றால் சரியல்ல. வாதி எனது பெரியமாமியார் என்பதால் அவருக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.